PUBLIC LIBRARY JAFFNA
PUBLIC LIBRARY
JAFFNA
JUN 2009

விலை ரூபா 15.00 REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876
இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

21-06-2009

மலர்: 133 இதழ்: 11 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

# இடம்பெயர்ந்தோர் தம் இல்லிடம் திரும்பும் காலக்கெடுவை தள்ளிப்போட வேண்டாம்

## யாழ் ஆயர் அரசாங்கத்திடம் வேண்டுகோள்



**இலங்கையில் போரினால் இடம்பெயர்ந்துள்ள சுமார் மூன்று இலட்சம் மக்களின் நிலைமை மிகவும் துயரமானதாகவுள்ளது. அவர்கள் விரைவில் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவேண்டும் என்றும் இவ்விடயத்தை நடைமுறைப்படுத்துவதை பின்போடவேண்டாம் என்றும் யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆயர் அவர்கள் வத்திக்கான் வானொலிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.**

அவர் மேலும் கூறுகையில் கண்ணிவெடிகள் அகற்றப்படல், வீடுகள் புனர்நிர்மாணம் செய்யப்படுதல், உள்கட்டமைபபுக் களைச் சீர்செய்தல் போன்ற பணிகள் மத்தியிலும் அரசாங்கம் மக்களின் மீள்குடியமர்த்தலுக்கு முன்னுரிமை கொடுத்து விரைந்து செயற்படவேண்டும் என்றும், தொண்டு நிறுவனங்கள் பலவும் முகாம்களிலுள்ள மக்களுக்கு பணியாற்ற அனுமதிக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினார். தற்போது இம்மக்களுக்கு செஞ்சிலுவைச்சங்கம், ஐ.நா மனிதாபிமானப் பணியாளர்கள் மற்றும் கரித்தாஸ் நிறுவனம் ஆகியவை மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட பணிகளை ஆற்ற அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதையும் ஆயர் அவர்கள் தனது பேட்டியில் சுட்டிக் காட்டினார்.

## பதுவை திருத்தலத்தை நினைவுபடுத்தும் பாசையூர் புனித அந்தோனியார் திருத்தலம்

### அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள்

கடந்த 13ம் திகதி பாசையூர் புனித அந்தோனியார் திருத்தல வருடாந்த விழா சிறப்புத்திருப்பலியை ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றிய புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி அதிபர் அருட்கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் பாசையூர் புனித அந்தோனியார் கோவிலின் கம்பீரமான தோற்றத்தைப் பார்க்கின்றபோது பாதுவா நகரிலே அமைந்துள்ள அந்தோனியாரின் தூய நாவினைத் தாங்கிய திருத்தலம்தான் என் நினைவிற்கு வருகின்றது என்று கூறினார்.

அவர் தொடர்ந்து தனது மறையுரையில், பாதுவா திருத்தலம் எப்போதும் இறைபிரசன்னம் நிறைந்ததாகவே காட்சிதரும். அங்கு வருகின்ற பக்தர்கள் தத்தம் மொழிகளிலே பாவசங்கீர்த்தன அருட்சாதனத்தைப் பெற்று தூய்மையான உள்ளத்தோடு புனிதரின் அருளினாலே நிறைந்து செல்வார்கள். கோடி அற்புதரான புனித அந்தோனியார் எளிமையான வாழ்வு வாழ்ந்து இறைவார்த்தையினை வல்லமையோடு போதித்தவர். சமையலறைக்குப் பொறுப்பாக இருந்த வேளையிலே இறைவார்த்தையைப் பறைசாற்ற அவர் பெற்ற அழைப்பிலிருந்து அவரின் காலடியிலே கொலைப்பாதகன் விழுந்து மன்னிப்புப் பெறும் வரையிலும் அவரின் வல்லமை இறைவார்த்தையிலே வெளிப்பட்டது. எனவேதான் இன்றும் அவரின் நாவானது அழியா நிலைபெற்றுள்ளது என்று கூறினார்.

நவநாட்களின்போது அருட்தந்தையர்கள் அருள்ராஜ், திரு

(8ம் பக்கம் பார்க்க...)

## ஒரு விழுப்பம்

### அமரர் சறத்ஜீவன் அடிகள் நினைவு மலர்




அமரர் அருட்தந்தை சரத்ஜீவன் அடிகளாரின் மறைவின் 31ம் நாள் நினைவின்போது அடிகளார் நினைவாக 'ஒரு விழுப்பம்' என்ற தலைப்பிலான நினைவுமலர் வெளியிடப்பட்டது. கடந்த 17ம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் யாழ் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலியின் பின்னர் அகவொளி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது இம்மலர் வெளியிட்டுவைக்கப்பட்டது. அருட்தந்தை யோசப் செல்வராஜா அடிகள் மலரை வெளியிட அதன் முதற்பிரதியை அமரர் சறத்ஜீவன் அடிகளாரின் தாயார் பெற்றுக்கொண்டார்.

## வன்னிப் பேரவலத்தில் பலியானோருக்காகவும் முகாம்களில் வாடுவோருக்காகவும் விஷேட வழிபாடு

யாழ் மறைமாவட்ட நீதி, சமாதான ஆணையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விஷேட வழிபாடு ஒன்று சென்ற 20ம் திகதி சனிக்கிழமை யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. வன்னிப் பேரவலத்தில் பலியானோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் முகாம்களில் வாடுவோருக்காகவும் இவ்வழியாட்டில் சிறப்பாக இறைவேண்டுதல் செய்யப்பட்டது.

பலியானோரின் குடும்பங்கள், காணாமல்போனோர், முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குருக்கள், துறவிகள், அடிப்படை வசதிகளின்றி முகாம்களில் துன்புறுவோர் ஆகிய பலரும் இவ்வழியாட்டில் விஷேடமாக நினைவுகூரப்பட்டார்கள்.

## யாழ் நகரில் மாவெரும் நற்கருணை ஆண்டவர் பவனி



காலம்: 28-06-2009 ஞாயிற்றுக்கிழமை

மாலை 3.30 மணிக்கு

பவனி செல்லும் வழிகள

பழைய பூங்கா வீதியிலுள்ள இறை தியான இல்லத்திலிருந்து ஆரம்பமாகி, பழைய பூங்காவீதி, குருசோ வீதி வழியாக மரியன்னை பேராலயம்.

பின்னர் பாங்சால் வீதி வழியாக குருநகர் புனித யாகப்பர் ஆலயம்

பின்னர் பிரதான வீதி, 4ம் குறுக்குத் தெரு வழியாக அடைக்கல அன்னை ஆலயத்தைச் சென்றடைந்து நிறைவடையும்.


மரியன்னை பேராலயம், புனித யாகப்பர் ஆலயம், அடைக்கல அன்னை ஆலயம் ஆகிய இடங்களில் பவனி தரித்து தியான உரைகள், ஆசீர்வாதம் என்பன இடம்பெறும்.

குறிப்பு : இறைமக்கள் இயன்றவரையில் வெள்ளை உடை அணிந்து கைகளில் வெள்ளை அல்லது சிவப்புநிற கொடிகளைத் தாங்கியவண்ணம் இப்பவனியில் கலந்துகொண்டு நற்கருணை ஆண்டவரை மகிமைப்படுத்தி அவருடைய வல்லமையான ஆசீர்வாதங்களைக் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம.

**பாடசாலை அதிபர்களுக்கு:** தங்கள் மாணவர்களை சீருடையோடு இப்பவனியில் கலந்து கொள்ள ஊக்கப்படுத்தி அனுப்பிவையுங்கள்.

**யாழ். மறைமாவட்ட [illegible] ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## திருவுளப்பணியாளர் சபையின் நிறுவுனர் நினைவு



கடந்த 17-05-2009ல் இறைபதமடைந்த திருவுளப்பணியாளர் சபையின் நிறுவுனர் அமரர் அருட்தந்தை லூயி மரி பரன் அடிகளாரின் 31ம் நாள் நினைவில் கொழும்புத்துறை திருவடி நிலையத்தில் யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பல குருக்கள் துறவியர் பொதுநிலை துணை அங்கத்தவர்கள் இப்பலியில் இணைந்து அமரரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டினார்கள் திருவுளச்சபையின் சிறிய குருமட அதிபர் அருட்தந்தை அன்ரன் மரியதாஸ் அடிகள் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

## கொழும்பு மறைமாவட்ட பேராயர் நியமனம்



கொழும்பு மறைமாவட்டத்தின் பேராயராக பேரருட் திரு. மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அடிகளாரால் நியமனம் பெற்றுள்ளார். இதுவரை பேராயராக பணியாற்றிய பேரருட்திரு. ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் இளைப்பாறியதைத் தொடர்ந்து இப்புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. புதிய பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்னர் கொழும்பு மறைமாவட்ட துணை ஆயராகப் பணியாற்றியபின்னர், வத்திக்கான் நற்செய்தி அறிவிப்புப் பணியகத்திலும், பின்னர் இந்தோனேசிய நாட்டின் வத்திக்கான் தூதுவராகவும் பணியாற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்காவிட்டால் காவலர் விழித்திருப்பது வீணாகும்

## உடனிருப்போம் உள்ளன்போடு செவிமடுப்போம்

வளம் கொழிக்கும் வன்னியின் விருட்சம் கிள்ளி எறியப்பட்டது. பெரு நிலப்பரப்பென்று பெயரெடுத்த பெருந்தாயின் பிள்ளைகள் இன்று ஏதிலிகளாக நொந்தவர்களாக; வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்களாக , மனஅழுத் தங்களோடும், மனவடுக்களோடும், முகாம்களிலும், நலன்புரி நிலையங்க ளிலும், வைத்தியசாலைகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எங்களில் பலர் ஒரு சில பொருட்களோடும் பணத்தோடும் சந்திக்கச் செல்கின்றோம். பலர் பணத்தை, பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிரும் நிலையில் இல்லாது இருக்கலாம். ஆனால் எமது நேரத்தைக் கொடுத்து அவர்களின் உணர்வுகளோடு உடனிருப்பது ஓர் உத்தம பணியாகும்.

நமது உடனிருப்பு "நான் கைவிடப்பட்டவன் அல்ல. அலட்சியப்படுத்தப்பட்டவன் அல்ல. என் மேல் அக்கறை உள்ளவர்கள் இருக்கின்றார்கள்" என்ற உணர் வைக் கொடுக்கும். இவ்வுணர்வு அவர்களுக்கு வாழ்வில் ஓர் பற்றை, பிடிப்பை ஏற்படுத்தும்.

செவிமடுத்தல் என்பது ஓர் கலை. எல்லோருக்கும் அது சாத்தியமானது அல்ல. ஆயினும் சமகால சூனிய சூழமைவில் வாழும் எமக்கு இக்கலை அவசியமானதொன்றாகும். உலக மயமாக்கலால் உலகம் சுருங்கி வேகமாக பயணிக்கும் இக்காலத்திலே யாருக்கு யார் செவிமடுப்பது.

போரினால் பாதிப்புற்று உடல் உள ஆன்மீக வடுக்களோடு வந்துள்ள எம் உறவுகளின் உள்ளத்து உணர்வுகளுக்கு, ஆதங்கங்களுக்கு, சோகக் கதைகளுக்கு செவிமடுப்பதுதான் நாம் செய்யக் கூடிய மிகப் பெரிய உதவியாகும்.

**அருட்பணி. சாள்ஸ் கொலின்ஸ்**

# வள(னா)ர் பப்பா பதில்கள்

**1. கேள்வி :** பப்பா! பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதா?

நரேந்திரன், யாழ்ப்பாணம்.

**பதில் :** கடந்தகால வரலாற்றில் பயத்தோடும், நடுக்கத்தோடும், அடிமைத்தன உணர்வு களோடும் வாழ்ந்து வந்தவர்களுக்கு, அதாவது அதனை பயங்கரவாதமாக உணர்ந்த வர்களுக்கு அது அழிக்கப்பட்டுவிட்டது என்பது உண்மைதான். அதேவேளை, கடந்தகால வரலாற்றை ஒரு விடுதலை வரலாறாக அனுபவித்தவர்களுக்கு அது அழிக்கப்பட்டுவிட்டது என்பது ஏற்றுக்கொள்ள கடினமானது என்பதும் மறுக்கமுடியாததே.

எனவே, நடந்து முடிந்த வரலாறு பயங்கரவாதமா, விடுதலை வரலாறா என்ற கேள்விக்குரிய பதிலில்தான் உங்கள் கேள்விக்குரிய பதிலும் தங்கியுள்ளது. எது எப்படியாயினும் விடுதலை வரலாற்றில் பயங்கரவாதம் தவிர்க்கமுடியாதது என்ற வாதம் மட்டும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படமுடியாதது.

**2. கேள்வி :** வளர்ப்பப்பாவே! இறைவனிடம் நேரடியாகப் பாவங்களைச் சொல்லி விட்டு குருவானவரிடம் மன்னிப்பு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டாலென்ன?

இருதயமேரி, பண்டத்தரிப்பு.

**பதில் :** இறைவனிடம் நேரடியாக வியாதிகளைச் சொல்லிவிட்டு டாக்டரிடம் மருந்து தரும்படி கேட்கலாமா?

**3. கேள்வி :** வளனாரே! முகாம்களில் வாழும் மக்கள் என்ன பாவம் செய்தார்கள்?

பார்த்திபன், பருத்தித்துறை.

**பதில் :** துன்பப்படுபவர்களெல்லாம் பாவிகளுமல்ல, பாவிகளெல்லாரும் துன்பப்படு பவர்களுமல்ல. இயேசு சிலுவையில் துன்பப்பட்டது பாவியென்ற படியினாலா? எமது பாவங்களுக்காக அவர் துன்பப்பட்டாரே. அதேபோல முகாம்களுக்குள் துன்பப்படு வோருக்கு முகாம்களுக்கு வெளியே 'சுதந்திரமாக' வாழ்வோரின் பாவங்களும் காரணம். அதாவது உம்முடைய பாவங்களுக்காக அவர்கள் துன்புறுகிறார்களோ என்று கேட்டுப்பாரும். (லூக்கா நற்செய்தி 13: 1-5 வரையுள்ள பகுதியை எடுத்து வாசியும்).

**4. கேள்வி :** இறுதிவரை மக்களோடு இருந்த குருக்கள் துறவிகளைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

அன்ரன், குருநகர்.

**பதில் :** பெருமைப்படுகிறேன். குருத்துவத்தை, துறவறத்தை தமது சொந்த நலன்க ளுக்காக பயன்படுத்த முனைபவர்களுக்கு இவர்களின் வாழ்வு ஒரு அறைகூவல். முழுமையான அர்ப்பணிப்புக்கு இவர்கள் முன்னுதாரணம். பாராட்டுகின்றேன்.

**5. கேள்வி :** பப்பாவுக்குத் தத்துவம் ஏதும் தெரிந்தால் சொல்வீர்களா?

மலர்விழி, சங்கானை.

**பதில் :** கொடுப்பதுதான் பெற்றுக்கொள்வது. அயலவனை நீ உன்னைப் போல் எண்ணினால் நீ கொடுக்கும்போது பெற்றுக்கொள்பவனும் நீயே.

**6. கேள்வி :** வளர்ப்பப்பா! நான் ஒரு குருவாக வரவிரும்புகிறேன் என்னை வழி நடத்துவீர்களா?

மனோகுமார், யாழ்ப்பாணம்.

**பதில் :** உமக்கு இந்த ஆசையை ஏற்படுத்தியவர் தூய ஆவியார்தான். எனவே அவருக்கு நன்றி சொல்லி தொடர்ந்து உம்மை வழிநடத்துமாறு அவரைக் கேளும். முதற்படியாக உமது ஆன்மீக வழிகாட்டியாக ஒரு குருவையோ, துறவியையோ தெரிந்தெடுத்து அறிவுரை கேளும். பரிசுத்த கன்னிமரியாளிடமும் புனித சூசையப்பரிடமும் உமது விருப்பத் தைச் சொல்லி மன்றாடும். தற்போது நீர் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தால் படிப்பில் கூடிய கவனம் செலுத்தும். "நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்." என்ற இயேசுவின் வார்த்தையை நினைவிற் கொள்ளும்.

# இறைவனின் அழைப்பை உணர்ந்து தம்மை அர்ப்பணிப்போர்க்கு முன்மாதிரி தந்தவர் புனித திருமுழுக்கு யோவானே!

**அருட் சகோ. ரமேஸ் அ.ம.தி**

மனிதர்கள் பலவிதம் ஒவ்வொருவரும் தனி ரகம் என்று கூறுவார்கள். இன்றைய மனிதர்களில் பலர் மனித நேயமும் மாண்பும் மிக்கவர்களாக திகழ்கின்றனர். சிலர் மிரு கங்களையும் விட இழிவு வாழ்க்கை நடத் துபவர்களாக உள்ளனர். ஒரு சிலரோ இவர் மனிதரா? புனிதரா? என வியந்து போற்றும் வகையில் குன்றுக்குன்றுகளாக வாழ்ந்து காட் டியும் உள்ளனர். இந்நிலையில் இறைவனுக்கு உகந்தவராய், மனித உறவுகளில் சிறந்தவ ராய், தன்னலம் துறந்து அறநெறி வாழ்வி லும் செயற்திறனும் உயர்ந்தவராய், தியாகத்தின் தீபமாய் சுடர்விட்டு ஒளியூட்டி வழிகாட்டி யவர்தான் புனித திருமுழுக்கு யோவான்.

நற்செய்திகள் சித்தரிக்கும் திருமுழுக்கு யோவான் தூய ஆவியினால் துள்ளியவர் (லூக் 1:39-45). இறைவார்த்தையை வாழ்ந்த எளிமையின் நாயகன் "உன்னையே நீ அறிந்துகொள்" என்றார் கிரேக்கப் பேரறிஞர் சோக்கிரட்டிஸ். இன்றைய உலகில் நிலவும் பல சண்டை சச்சரவுகளுக்கும், பிளவுக ளுக்கும், போருக்கும் காரணம் மனிதன் தன்னைப் பற்றியும் பிறரைப்பற்றியும் அறிந்து புரிந்து கொள்ளாத தன்மையே ஆகும். ஆனால் தான் யாரென்றும் தனது பணி எது வென்றும், தனது அழைப்பு எத்தகையது என்றும், தனது வாழ்க்கை முறை எவ்வாறு அமைய வேண்டும் என்றும் நன்கு உணர்ந்து கொண்டவர் திருமுழுக்கு யோவான். எனவே தான் "என்னைவிட வலிமை மிக்க ஒருவர் எனக்குப் பின் வருகிறார். குனிந்து அவரு டைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை" (மாற் 1:7) என்றார். "நான் மெசியாவுமல்ல, எலியாவுமல்ல, இறைவாக்கினருமல்ல பாலைநிலக் குரல் நான்" (யோவா 1:19-23) என்று தன்னை அடை யாளப்படுத்துகிறார்.

ஒவ்வொரு மனிதரது வெற்றிக்கும் அடித் தளமாக அமைவது அவரது தொலை நோக்குப் பார்வையும், குறிக்கோளும் ஆகும். "அவரது செல்வாக்கு பெருக வேண்டும் எனது செல்வாக்கு குறைய வேண்டும்" (யோவா 3:30) என்ற குறிக்கோளோடு அஞ்சா நெஞ்சுடன் "இதோ கடவுளுடைய ஆட் டுக்குட்டி" (யோவா 1:36) என்று கிறிஸ்துவை சுட்டிக்காட்டிய திருமுழுக்கு யோவானை ஒவ்வொரு நற்செய்திப் பணியாளரும் முன்னு தாரணமாகக் கொண்டால் இறையரசு வேக மாகவும், உயிரூட்டமுள்ளதாகவும் கட்டி யெழுப்பப்படும் என்பதில் ஐயமில்லை. ஆனால் தவற்றை இடித்துரைத்து, அநீதிகளுக்கு குரல் கொடுக்கும் மனிதர்களை அன்றல்ல இன்றும் உலகம் விட்டுவைப்பதில்லை என்பது கண்கூடு. திருமுழுக்கு யோவான் கபிரியேல் தூதரால் மட்டுமல்ல, இஸ்ராயேல் மக்களாலும் மேலாக கடவுளின் திரு மகனாலும் புகழ்ந்துரைக்கப்பட்டார். "மனிதராய் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானை விடப் பெரியவர் ஒருவருமில்லை" (லூக் 7:28). எனினும் எளிய, ஆடம்பரமற்ற வாழ்வினூ டாக தனக்குக் கொடுக்கப்பட்ட பணியிலே கருத்தாயிருந்தார்.

எமது சமுதாயத்தில் நான் புகழ் பெற வேண்டும், முன்னேற வேண்டும் என்பதற் காக அருட்பணியாளர்களை, மக்களைக் குறை கூறும் வஞ்சகமும், தரங்கெட்ட பழக்கவழக் கங்களும் தரைமட்டமாகட்டும். நீதிக்கும் உண்மைக்கும் அஞ்சா நெஞ்சுடன் குரல் கொடுத்து தம்மையே தாரைவார்த்த திரு முழுக்கு யோவானைப் போல, ஒவ்வொரு மறைப்பணியாளரும் நீதிக்குக் குரல்கொடுப் பவராக, தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத் துபவராக, அதேவேளையில் அதே தவறு களுக்குத் தாம் அடிமையாகிவிடாமல் இன் றைய இறைவாக்கினராக விளங்கிட வேண் டும். ஏனெனில் நாம் மனிதராக இவ்வுலகில் பிறந்தது ஓர் அழைப்பு. கிறிஸ்தவராகத் திரு முழுக்குப் பெற்றது ஓர் சிறப்பான அழைப்பு. குருத்துவம், துறவறம் என்பது கிறிஸ்தவத் தில் வரும் விசேட அழைப்பு. எது போன்ற அழைப்பு என்பது முக்கியமல்ல மாறாக, எந்த நிலையில் அழைக்கப்பட்டாலும் எனது வாழ்வின் மூலமாக நான் இயேசுவுக்கு சாட்சியாக இருக்கின்றேனா என்பதே முக்கி யமானது. எனவே நம் குடும்பத்தை, எதிர் காலத்தை, நம் திறமைகளை, அனுபவங் களை, நல்ல மனத்தை, நேரத்தை, உழைப்பைக் கடவுளுடைய மகிமைக்காகவும், திருச்சபை யின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல்வாழ்விற்காகவும் தாரை வார்த்திடுவோம். இயேசுவால் புகழப்பட்ட திருமுழுக்கு யோவா னைப் போல நாமும் இறைவனின் அழைப்பை உணர்ந்து எம்மை அர்ப்பணிக்க இன்றே புறப்படுவோம்.

# துன்புறும் எம் உறவுகளுக்கான செபமாலைத் தியானம்

"தாயே உன் பாதம் தஞ்சம் என்றோடி வருதோம்" 2008ம் ஆண்டு இறுதிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நான்காம் ஈழப்போர் என்றுமே வரலாறு காணாத இழப்புக்களையும், மரணங்களையும் அகதி வாழ்வையும் எம் இனத்திற்கு பரிசாகத் தந்தது. எம் அயல் நாடுகள், சர்வதேச நாடுகள் எமக்காக குரல் கொடுக்கும் என்று காத்திருந்து ஏமாற்ற நிலையில் எமக்காக இறைவனிடம் பரிந்து பேசும் அன்னை மரியாள் நமக்காக இறைவனிடம் பரிந்துபேசி எம் மக்களை மீட்டுத் தந்தார்.

இந்நிலையில் எம் பங்குத்தந்தை அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அவர்களால் 2008 புரட்டாதி 21ம் நாள் கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஆரம் பிக்கப்பட்ட செபமாலைத் தியானத்தில் நாற் பது நாட்களாக காலை 9.00 - மாலை 3.00 மணிவரை தொடர் செபமாலை சொல்லி அன்னை மரியின் பரிந்துரைக் கேட்டு வந்தோம்.

அதன் தொடர்ச்சியாகவே தை 2ம் திகதி சனிக்கிழமை புதுமை மாதா ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட உபவாச செபமாலைத் தியானம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 10.00 - பி.ப. 2.00 மணி வரையும் பத் தொன்பது சனிக்கிழமைகளாக தொடர்ச்சி யாக நடைபெற்று வந்தது. இதில் பங்கு பற் றிய மக்கள், விருப்பத்தோடும் ஆர்வத்தோடும் பங்கு பற்றினார்கள். செபமாலையோடு இறை வார்த்தையையும் ஒவ்வொரு மறை நிகழ்ச் சியுடனும் இணைந்து தியானித்தோம். இந்த தியானத்திலே அருட்தந்தையர்கள் ஜெய சீலன் அடிகளார், மரியதாசன் (I.V.D) அடி களார், றெஜிஸ் இராஜநாயகம் அடிகளார் அவர்களும் வருகை தந்து இறைவார்த்தை யோடு செபமாலையை தியானிக்க எம்முடன் சேர்ந்து பயணித்தார்கள்.

"இறுதியில் என் மாசற்ற இருதயம் வெல்லும்" என்ற தேவதாயின் வாக்குக்கு ஏற்ப எம் பாவ அடிமைத்தனத்திற்கும், எல்லா வகையான அடிமைத்தனத்திற்கும் எதிரான ஆயுதமாக நாம் செபமாலையை எம் கரத் தில் ஏந்தினோம். குருக்கள் துறவிகள் இறை மக்களில் பெருமளவு பங்களிப்பு இல்லா விட்டாலும் பங்கு பற்றிய ஒவ்வொருவரும் விடாமுயற்சியுடனும் நம்பிக்கையுடனும் தொடர்ந்து பயணித்தோம்.

செபமாலைத் தியானத்திலே நாம் கேட்ட இறைவார்த்தைகளும், நாம் சொல்லிய செப மாலையும் எம் தனிப்பட்ட வாழ்விலும் மரியாள் மீது அதிக பக்தியின், எதிர்கால நம்பிக்கையும் ஏற்படுத்தியதுடன் துன்புறும் மக்களுக்கு மரியன்னையின், பரிந்துரையைப் பெற்றுக் கொடுத்த மனநிறைவை நாம் அடைந்தோம். எமது செபங்களும், நோன்புகளும் அவர்க

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணம் செய்யும் திருச்சபையின் நம்பிக்கை ஒளி - மரியாள்



யாழ்ப்பாண வரலாற்றைப் பார்த்தால் கிறிஸ்தவர்கள் அன்னை மீது அளவுகடந்த அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்ததை நாம் உணர முடிகிறது. அதே நிலையை நாம் இன்று கைக்கொண்டுள்ளோம். யாழ்ப்பாணத்தில் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் அன்னைக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருப்பதே இதற்கு சான்று.

இவ்வுலகில் பயணம் செய்யும் திருச்சபைக்கு அன்னைமரியாள் நம்பிக்கையின் ஒளியாய் திகழ்கின்றாள். அவளது பிறப்பு மானிட மீட்பு நெருங்கிவிட்டது என்ற நம்பிக்கை ஊட்டியது. இயேசு பிறந்தது முதல் அவரோடு ஒன்றித்து வாழ்ந்தவள் மரியாள். மீட்புப்பணியில், சிறப்பாக அவருடைய பாடுகள், மரணம் ஆகியவற்றின் போது உடனிருந்து பணிபுரிந்தவள் நம் அன்னை. உயிர்ப்பின் மகிமையைக்கண்டு உணர்ந்து களிகூர்ந்தாள், இறுதியில் மகிமையோடு விண்ணேற்பு அடைந்தார். ஆம், நம்மைப்போல் மனிதராகப் பிறந்து மனித சமுதாயத்தில் வாழ்ந்து பல்வேறு சூழ்நிலைகளில் உழன்று, இன்ப துன்பங்களை அனுபவித்த மரியாள் உணர்வு பெற்றது போல் நாமும் ஓர் நாள் உன்னத வாழ்வைப் பெறுவோம் என்று உறுதியான நம்பிக்கை கொள்வோம்.

- பிரியா -
புனித யாகப்பர் ஆலயம்.

# சமாதான நீதவானாக சத்திய பிரமாணம்



கண்டி மாவட்டம் புனித அந்தோனியார் தேவாலயம் மட்டக்கலை பங்கைச் சேர்ந்த அமரர் சூசை சிங்கராயர், திருமதி சிங்கராயர் ரோசம்மா தம்பதிகளின் மகனான சிங்கராயர் ஜியோ ஜோசப் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் 28.05.2009 மாலை 3.00 மணிக்கு சத்திய பிரமாணம் செய்து கொண்டார். இச்சத்தியப்பிரமாணம் நுவரெலியா மாவட்ட நீதிபதி அமாலி ரணவீர முன்னிலையில் இடம் பெற்றது. இவர் தற்போது போக்குவரத்துப் பிரிவில் (தேயிலை ஆராய்ச்சி நிலையம்) பணிபுரிந்து கொண்டு பங்கின் சமூகப் பணிகளிலும் ஆர்வத்துடன் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

# துன்புறும் உறவுகளுடன் இரண்டறக்கலப்போம்

மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக எமது மண்ணில் இடம்பெற்ற கொடிய யுத்தம் நிறைவடைந்து விட்டது. பெரும் இரத்த களரியை ஏற்படுத்தி எண்ணிக்கை அற்ற உயிர்களைக் காவு கொண்ட ஆயுதங்கள் மௌனித்து ஓய்ந்து விட்டன. நாம் பெற்றுக் கொண்ட இத்தாக்குதல் அற்ற ஒரு அமைதி சூழ்நிலை எமக்கு ஒரு நிம்மதியைத் தந்தாலும் அதற்கு அப்பால் நான் ஒரு கிறிஸ்தவன் (அவள்) என்ற நிலையில் நின்று எனது கடமையும் பொறுப்புக்களும் என்ன என்பதை சிந்திக்க இக்காலத்தில் நாம் அழைக்கப்படுகின்றோம்.

## சமாதானத்தின் கருவி

திருமுழுக்குப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் சமாதானத்தின் கருவியாக மாறி சமாதானத்திற்காக உழைக்க கடமைப்பட்டிருக்கின்றோம். "அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்" (மத் 5:9) என்ற இறைவார்த்தைக்கு அர்த்தம் கொடுத்து வாழ நாம் அழைக்கப்படுகின்றோம். தற்போது ஏற்பட்டிருக்கும் அமைதி தொடர்ந்து இருக்கவும் நிலையானதாக மாறவும் எமது பங்களிப்பை வழங்குவதன் மூலம் மேற்சொன்ன இறைவார்த்தையை எமது வாழ்வாக்குவோம்.

இறைமகன் இயேசு உயிர்ப்பின் பின் சீடர்களுக்கு தோன்றிய போது "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (லூக் 24:36) என்று அவர் வாழ்த்தியதை நற்செய்தியில் காணுகின்றோம். இறைமகன் இயேசுவிற்கு நறுமணத்தைலம் பூசிய பாவியான பெண்ணின் பாவங்களை மன்னித்து அவளை அனுப்பும்போது "உமது நம்பிக்கை உம்மை மீட்டது அமைதியுடன் செல்லும்" (லூக் 7:36-50) என்று சமாதான வாழ்த்துக் கூறி அனுப்புவதை நாம் வாசிக்கின்றோம். எனவே இறைமகன் இயேசுவை எமது மீட்பராக ஏற்றுக் கொள்ளும் நாம் கிறிஸ்து அவனாக (அவளாக) வாழ்கின்றோம் என்பதை வெளிக்காட்ட நிலையான அமைதிக்காக உழைக்கவும் நம்பிக்கையோடு செபிக்கவும் முற்படுவோம்.

## கண்ணீரைத் துடைப்போம்

வன்னி மண்ணில் இடம்பெற்ற கடுமையான மூர்க்கத்தனமான தாக்குதலால் தங்களுடைய அன்பு உறவுகளை இழந்து வேதனையோடும் கண்ணீரோடும் வாழுகின்ற எம் சகோதரர்களை நாம் நினைத்துப்பார்ப்போம். எமக்கு இப்படியாக துன்பம் ஏற்படவில்லை என்பதற்காக நாம் மௌனித்து இருக்காமல் அவர்களுடைய இடத்திலே நாம் இருந்து அனுபவித்து அவர்களின் வேதனையை எமதாக்குவோம். தொழுகைக்கூடத் தலைவனுடைய மகள் இறந்து அனைவரும் மாரடித்து அழுது புலம்பிக்கொண்டிருந்தபோது அவர்களுடைய கண்ணீரைக் கண்டு இரங்கிய இறைமகன் இயேசு சிறுமிக்கு உயிர் கொடுத்து அவர்களின் கண்ணீரைத் துடைத்தார். (லூக் 8:49-56) நயீம் பட்டணத்து விதவைத்தாயின் மகனுக்கு உயிர் கொடுத்து அத்தாயின் துயரத்தை நீக்கி அவள் கண்ணீரைத் துடைப்பதை நாம் காணுகின்றோம். (லூக் 7:11-12) எனவே ஆண்டவர் இயேசுவின் கரங்களைப்போல எமது கரங்களும் மாறி இம்மக்களின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக செயற்பட வேண்டும்.

## பகிர்ந்து வாழுவோம்

அகதிகளாக நலன்புரி முகாம்களில் வாழும் மக்கள், அவர்களுக்கு இன்று எதுவுமே இல்லாமல் வெறுங்கையோடு வாழ்கின்றார்கள். தம்முடைய உயிரைக் காத்துக் கொள்ள பல தடவை இடம்பெயர்ந்து அனைத்தையும் இழந்து மற்றவர்களின் தயவை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். இவர்கள் செல்வச் செழிப்போடு வாழ்ந்தவர்கள், ஏழைகள் அல்ல ஏழைகளாக்கப்பட்டவர்கள். "ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. (மத் 5:3) என்ற இறைவார்த்தையை எமதாக்கி இவர்களோடு எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இறை அரசை உருவாக்கிடுவோம்.

## ஆற்றுப்படுத்துவோம்

ஆயிரக்கணக்கான மக்கள் தமது உறவுகளை இழந்து கண்ணீரோடும் கவலையோடும் வாழ்க்கையிலே ஒரு பிடிப்பற்று வாழுகின்றார்கள். பெற்றோரை இழந்த குழந்தைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் தமது வாழ்க்கை துணையை இழந்தவர்கள் என்று பல்வேறு வகையினர் உருவாக்கப்பட்டிருக்கின்றார்கள். தங்களுடைய அங்கங்களை இழந்து ஊனமாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? பல்வேறு விதமான மன உளைச்சலுக்கும் உளவியல் தாக்கத்திற்கும் உட்பட்டிருக்கும் இவர்களை நாம் எமது உடன் பிறப்புக்கள் என்ற உணர்வோடு அணுகி அன்போடு உறவு கொண்டு மனக்காயங்களுக்கு ஒத்தடம் கொடுப்போம். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மன ஊனத்தையும் உடல் ஊனத்தையும் ஏற்றுக்கொண்டு வாழ முடியும் என்ற மன உறுதியை கொடுப்போம். இவர்கள் ஏன் இந்த துன்பம்? என்ற கேள்விக்கு விடை தேட முனையாமல் இறைவனுடைய திட்டமே அனைத்தும் என்று ஏற்றுக் கொள்ளவும் இத்துன்பங்களின் ஊடாகவே இறையாட்சியை நோக்கி பயணிக்க முடியும் என்பதையும் தெளிவுபடுத்தி விசுவாசத்தை உறுதிப்படுத்துவோம். "இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களுடன் இருக்கின்றேன்" (மத்தேயு 28:20) என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தையை நினைவூட்டி இறைமகன் இயேசுவின் உயிருள்ள பிரசன்னமும் உடனிருப்பும் என்றும் எம்மோடு உண்டு என்பதை உறுதிப்படுத்தி வாழ்வில் நம்பிக்கையும் ஒரு பற்றையும் ஏற்படுத்துவோம்.

## இறைவேண்டல் செய்வோம்

வன்னி மண்ணில் இடம்பெற்ற மனித பேரவலத்தின் காரணமாக உயிர்நீத்த சகல தரப்பினரையும் நினைத்து அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவேண்டல் செய்வோம். 'உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள். உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்' (லூக் 6:27) என்ற இறைவார்த்தையை மனதிற்கொண்டு இதற்கு காரணமானவர்களை குரோத எண்ணத்தோடு பார்க்காமல் மன்னித்து ஏற்றுக்கொள்வோம்.

நலன்புரி நிலையத்தின் முட்கம்பி வேலிக்குள் வாழும் மக்களின் அனைத்து அடிப்படை தேவைகளும் பூர்த்தி செய்யப்படவும் விசேட விதமான மனித மாண்பு மதிக்கப்பட்டு அவர்களுடைய உயிருக்கு உத்தரவாதம் கிடைக்க வேண்டுமென்றும் ஜெபிப்போம்.

நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான கடமையும், பொறுப்பும் எம் ஒவ்வொருவருக்கும் இருந்தாலும் சமாதானத்தை ஏற்படுத்தி நிலைநிறுத்தும் அதிகாரமும் வலுவும் ஆட்சியாளர் கையிலேயே இருக்கின்றது. எனவே இவர்களை இறைவன் கரத்தில் பொறுப்புக் கொடுத்து மன்றாடுவோம். "நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் நிறைவு பெறுவார்கள். (மத் 5:6) என்ற இறைவார்த்தைக்கேற்ப சமத்துவத்தோடு அனைவரையும் மதிக்கின்ற, நீதியோடு கூடிய ஒரு தீர்வை முன்வைக்க இவர்கள் உள்ளத்தில் ஒரு தூண்டுதலை தொடுக்க வேண்டுமென்று இறைவேண்டல் செய்வோம். அத்தோடு சமாதானத்தையும் சம உரிமையையும் விரும்பாத கடும் போக்காளர்களையும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக கடும் வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவோரையும் நாம் அன்பு செய்து இறைவனிடம் ஒப்படைப்போம். அவர்களையும் இறைவன் ஆசீர்வதித்து அருள் பொழிந்து சமாதானத்தின் கருவிகளாக மாற்ற வேண்டுமென்று மன்றாடுவோம்.

## முடிவாக

இறைமகன் இயேசு துன்பம் நிறைந்த சிலுவையின் பாதையில் வழிநடந்தது போல மிகவும் பாரமான சிலுவைகளை தாங்கி வழிநடத்து சீமோன்களையும், வெரோனிக்காக்களையும் எதிர்பாத்து காத்திருக்கும் திறந்த வெளி சிறையில் வாழுகின்ற எம் உறவுகளின் சுமைகளை நாமும் பகிர்ந்து கொண்டு அவர்களின் சோகங்களை துடைத்து விடுவோம். அனைவரும் ஒன்று சேர்ந்து சோர்ந்து போகாமல் முயன்று ஒரு மகிழ்வான நிறைவான எதிர்காலத்தை கொடுப்போம்.

**ஆ.அ. அமலரட்ணம், யாழ். பேராலயம்**

# இளவாலை மறைக்கோட்டத்தில் — மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வு —

திருத்தூதரான தூயபவுலின் 2000ஆம் யூபிலியாண்டை முன்னிட்டு யாழ் மறைக் கல்வி நடுநிலையம் முன்னெடுக்கும் பல செயற்பாட்டு நிகழ்வுகளில் ஒன்றான, தூய பவுலின் வாழ்வும், பணியும் பற்றிய அறிவூட்டல்களை வழங்கும் பொருட்டு, மறைக் கோட்டங்கள் ரீதியிலான கருத்தரங்குகளை நடைமுறைப்படுத்தும் பணியில் 06.06.2009 அன்று சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணிவரை மேற்படி கருத்தமர்வு பண்டத்தரிப்பு பற்றிமா ஆலயத்தில் இடம்பெற்றது.

முதல் அமர்வாக மறையாசிரியர் திரு.எஸ்.அன்ரனிப்பிள்ளை அவர்களால் 'தூய பவுலின் நற்செய்திப்பணி' என்னும் தலைப்பில் அவரது நான்கு மறைத்தூதுப் பயணங்கள் பற்றிய விரிவாக கருத்துரை மிகவும் இரத்தினச் சுருக்கமான முறையில் வழங்கப்பட்டது.

m L j J; n CMFy அவர்களால் 'தூயபவுலின் கடினமான போதனைகள்' என்னும் தலைப்பில் தத்துவக் கோட்பாட்டு அடிப்படையில் தூய பவுலின் திருமுகங்களின் ஆதாரத்துடன் கருத்துரை வழங்கப் பட்ட செயற்பாடானது, பங்குபற்றியோரின் மனதில் பல புதிய எண்ணக்கருக்களையும், சிந்தனைகளையும் தூண்டும் முறையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து கருத்துரை வழங்கிய அருட்பணி றொபின்சன் "தூய பவுலின் பார்வையில் திருச்சபை" என்ற தலைப்பிற்கான பல விளக்கங்களை சிறந்த திருமுக ஆய்வின் ஊடாகத் தெளிவுபடுத்தி திருச்சபை என்ற பதமும், அதன் பணியும் எவ்வாறு தூய பவுலின் கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் பெற்றது என்பது பற்றிய விளக்கவுரையினை சிறந்த கற்பித்தல் உத்திகளின் ஊடாகத் தெளிவுபடுத்தினார்.

மதிய இடைவேளைக்கு பின்பு கருத்துரை வழங்கிய திரு.இ.ம. ஜெயசீலன் அவர்கள் "தூய பவுலின் போதனையில் திருவருட்சாதனங்கள்" என்னும் தலைப்பில் தமது கருத்துரையினை மிகவும் சுவாரசியமான முறையில் எடுத்துரைத்து திருவருட்சாதனங்களின் ஒழுங்கு முறைகளிலும், அதனை ... வாழ்வாக்கும் ... பான முக்கியத்துவத்தையும், பக்திபூர்வமான ஈடுபாட்டையும் கொண்டிருந்தார் என்பதை திருமுக ஆதாரங்களூடாகத் தெளிவுபடுத்தினார்.

மேற்படி கருத்தமர்வானது தூயபவுலின் வாழ்க்கை வரலாற்றையும், மறைபோதப்பணியையும் பற்றி மிகவும் சுருக்கமாகவும், அதே வேளை பல புதிய தகவல்களை உள்ளடக்கியும் அறியக் கூடியதாக அமைந்திருந்தமையும், இவ்வழிகாட்டல் ஊடாக மறையாசிரியர்கள் மேலும் மேலும் இத்திருத்தூதர் பற்றிய தேடலிலும் கற்றலிலும், வாழ்வைப் பின்பற்றலிலும் ஆர்வத்தை ஏற்படுத்த வழி வகுத்தமை பயன் மிக்கதொரு அம்சமாக விளங்கியது எனலாம்.

இக்கருத்தரங்கானது யாழ் மறைக்கல்வி நடுநிலைய அனுசரணையுடன் இளவாலை மறைக்கோட்ட முதல்வரின் தலைமையிலும், பண்டத்தரிப்பு பங்குத்தந்தையின் பூரண ஒத்துழைப்புடனும் சிறப்புற இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஏறக்குறைய 90 மறையாசிரியர்கள் பங்குகொ... பயனடைந்தனர்.

S.M ... ரன்ஸ்.

பாட்டி : ஐஸ்கிறீம் சப்பர்
பேரன் : பாட்டி ஏன் இந்த வயதில் ஐஸ்கிறீம் சாப்பிடுறீங்க!
பாட்டி : சின்ன வயதிலே சாப்பிட்டா பல்லு கொட்டிவிடும் என்றுதான் இந்த வயதில சாப்பிடுறன்.

* * * * * * * * * * * *


கமலா : இதென்ன? உங்கட ரீவியில் கர, கரவென்று சவுண்டு வருகுது
நிமலா : பாடகி கரகரப்பிரியா ராகத்தில ஆலாபனை பண்ணினாராம்.

பிரியா, புனித யாகப்பர் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரித்தாஸ் ஹியூடெக்
HUDEC
யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபையின் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம்
Caritas

## சுனாமி உதவித்திட்டத்தின் நிகழ்ச்சிகள்



சுனாமியால் பாதிக்கப்பட்ட மிக வறிய மக்களுக்கு யாழ் ஆயர் அவர்களால் பருத்தித்துறை அல்வாயில் 60 பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டு, 60 பயனாளிகளுக்கு ஒரு வீடு 900,000/= ரூபா செலவில் 60 வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சக்கோட்டை பங்குத்தந்தை அருட்பணி ம.பத்திநாதர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டம் ஆனி மாதம் 30 ம் திகதிக்கு இடையில் கையளிக்கப்பட இருக்கின்றது அத்துடன் இப் பயனாளிகளுக்கு 4 பொது குழாய்க்கிணறுகளும் அமைத்து கையளிக்கப்பட இருக்கின்றது.



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள அல்வாய், திக்கம் எனும் இடத்தில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் சுனாமி நிவாரணத்திட்டத்தின்கீழ் 1.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட முன்பள்ளியை நிறுவன இயக்குனர் அருட்பணி.கி.யோ. ஜெயக்குமார், கரவெட்டி பிரதேச செயலாளர் திரு. சத்தியசீலன் ஆகியோரால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது



சகாயபுரம், விளான் ஆகிய இடங்களில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினால் இரு முன்பள்ளிகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட இருக்கின்றன. இம் முன்பள்ளிகளின் மூலம் இப்பிரதேசத்தில் உள்ள வறிய மாணவர்கள் ஆரம்பக்கல்வியைப்பெற்றுப் பயனடைவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.



இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினால் மலசலகூடத்தொகுதி கட்டி முடிக்கப்பட்டு கையளிக்கப்படவுள்ளது.

## நிவாரணப்பணிகள்

### மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்



கியூடெக் - கரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்பணி.கி.யோ.ஜெயக்குமார் அவர்களால் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களில் கிராமசேவகர் ஊடாக தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட 13 பயனாளிகளுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

### சத்துமா வழங்கல்



கியூடெக் - கரித்தாஸ் நிறுவன பெண்கள் குழுக்களின் ஒத்துழைப்பாலும், முயற்சியாலும் அங்கத்தவர்களிடையே சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட சத்துமாப்பொதிகள் 11 முகாம்களில் உள்ள கர்ப்பிணித்தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு வழங்கப்பட்டது

### மனித உரிமைகள் விழிப்பூட்டல் கருத்தமர்வு



கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் யாழ் மாவட்டத்தில் உள்ள அரச அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களுடன் இணைந்த மனித உரிமைகள் திட்டமிடல் கருத்தமர்வில் சட்டத்தரணி றெமிடியஸ் கருத்துரையாற்றினார்.



குழுத்தலைவர்களுக்கான உரிமைகளும் கடமைகளும் கருத்தமர்வில் யாழ் மாவட்ட குழுத் தலைவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

**"துண்டுபட்ட தனிமனிதனல்ல ஒன்றுபட்ட மனிதகுலம் முன்னேற வேண்டும்"** (பாப்பிறை 6ம் சின்னப்பர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு. யே. அ. அருள்தாசன்

## பொதுக்காலம் 14ம் ஞாயிறு

"நலன்தரும் நல்வாழ்வை நல்கும் நம் நம்பிக்கையை வலுவாக்குவோம்."

"அங்கே உடல் நலமற்றோர் சிலர் மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர வேறு வல்ல செயல் எதையும் அவரால் செய்ய இயலவில்லை. அவர்களது நம்பிக்கையின்மையைக் கண்டு அவர் வியப்புற்றார்." (மாற் 6:5)

'நம்பிக்கையே நம் நல்வாழ்வு' இறைவன் மீது நாம் பதித்துக் கொள்ளும் அசையாத நம்பிக்கையே எமது வாழ்வின் உரமும், நலிவில் ஊட்டமும் உறுதியும் அளித்து வலுவூட்டுகிறது.

இறைவன் மீது மட்டுமே வைக்க வேண்டிய நம்பிக்கையை இறைவனுக்கடுத்த அவரின் படைப்புக்கள், மனிதர்கள், அமைப்புக்கள், அதிகாரங்கள், பதவிகள், பணம் முதலான இவற்றின் மீது வைக்கும் போது அவை பாவத்திற்கு ஏதுவாகவும் எமது அமைதியான நல்வாழ்விற்குக் குந்தகமாகவும் அழிவிற்கு வாயிலாகவும் அமையலாம்.

பழைய ஏற்பாட்டின் மனுக்குலத்தின் அன்னையான ஏவாள் கடவுளை விட படைப்பாகிய சூழ்ச்சி மிக்க பாம்பில் நம்பிக்கை வைத்ததால் பாவம் மனுக்குலத்தின் நுழைந்தது மட்டுமன்றி பாவத்தின் விளைவானது மனித குலமனைத்தையுமே சந்ததிதோறும் அழிவின் பாதைக்கு இட்டுச் செல்ல வழிகோலியது.

இஸ்ராயேல் மக்கள் அடிமை வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து தமக்கு விடுதலையளித்துக் காத்துப் பாலைநிலத்தில் காடையின் இறைச்சியினாலும், மன்னா உணவினாலும் நிறைவளித்து, பகலில் மேகத்தூணாகவும், இரவில் நெருப்புத் தூணாகவும் இருந்து வழிநடத்திய இறைவனின் நன்மைத்தனத்தை 'மறந்து நம்பிக்கையிழந்ததால் அவர்கள் கொள்ளிவாய்ப் பாம்பினால் கடியுண்டு நின்றதிரிழந்து அவதியுற்றுத் தவித்தனர்.

"ஓய்வுநாள் வந்தபோது அவர் தொழுகைக் கூடத்தில் கற்பிக்கத் தொடங்கினார். அதைக் கேட்ட பலர் வியப்பில் ஆழ்ந்தனர். அவர்கள், "இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! என்னே இவருடைய கைகளால் ஆகும் வல்ல செயல்கள்!" (மாற் 6:2) என்றனர்.

இயேசுவின் வார்த்தையில் இறைஞானமும், அவரது கரங்களின் செயல்களால் இறைவல்லமையும் வெளிப்பட்டபோதும், இயேசுவின் சொந்த ஊரார் இயேசுவின்மீது நம்பிக்கையிழந்து இடறல் பட்டதன் விளைவாக இறைவனின் திருக்கர வல்லமையின் நன்மைத்தனமும் அருளாசீரும் அவர்களை வந்தடைவதற்குத் தாமே தமக்கு தடைக்கல்லாயினர்.

"இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன் தானே! யாக்கோபு, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?" என்கிறார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள்." (மாற் 6:3)

ஒருவரைப்பற்றி நாம் கொள்ளும் முன்சார்பு எண்ணங்கள் ஆதாரமற்ற கருதுகோள்கள், தாழ்ச்சியின்மை, ஆணவம், தற்பெருமை, அகங்காரம் என்பன எமது ஆன்ம ஈடேற்றத்திற்கும், முதிர்ச்சியடைந்த மனித நேய நடத்தைக்கும் முட்டுக்கட்டையாகவும் ஒருவரின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் பெருந்தடையாகவும் அமையுமென்பதில் ஐயமில்லை.

இறைபற்றற்ற மனித மனங்கள், இறைவார்த்தையும், இறைதிருவுளமும் நிறைவேற தடைக்கல்லாகின்றன. ஆகவே மனித மனங்களில் தாழ்ச்சியென்ற பண்பு மேலோங்க வேண்டும்.

தாழ்ச்சி நிறை மனங்கள் இறை திருவுளம் நிறைவேறும் மாட்சியின் ஆலயங்கள் ஆகின்றன.

தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்புகிறார்." (லூக் 1:53) என்பது மரியாளின் பூரணம் தூய பவுல் தன் தாழ்வுற்ற வலுவின்மையில் இறைவல்லமையை உணர்வதாக எண்பிக்கின்றார்.

"..... ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித்தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும்." (2 கொரி 12:9)

இறைவன் திருமுன் எம்மைத் தாழ்த்தி அவர் மீது எமது நம்பிக்கையை இன்னுமின்னும் ஆழமாக்கி வாழ்வோம். எமது ஒவ்வொரு மூச்சும், பேச்சும், செயலும், சிந்தனையும் இறைவன் மீது எமக்குள்ள நம்பிக்கையை ஆழமாக வெளிப்படுத்தும் உன்னத அடையாளங்களாக அமைவனவாக.

"எனக்கு வலுவூட்டுபவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றலுண்டு" (பிலிப் 4:13)

மேற்கொள்ள முடியாத பல வீனங்களால் வாழ்வில் ஏற்படும் மறுக்கமுடியாத தோல்விகள் எமது வாழ்வில் நிரந்தரமான வீழ்ச்சிக்கான முடிவுகளல்ல. அவை எமது வாழ்வில் இறைவனின் பலத்தை எமக்கு உணர்த்தி, வாழ்வை மீளாய்வு செய்து பலத்தோடு மீண்டும் இயல்பாய் எழுவதற்கான வெற்றிக்கான வாழ்க்கைப் பாடங்கள் என்பதை உறுதியுடன் ஏற்று வீறுகொண்டு செயல்படுவோம்.

## பொதுக்காலம் 15ம் ஞாயிறு

எமது பலமும் செல்வமும் கிறிஸ்துவே! கிறிஸ்துவை நாம் தாங்கும் கை எமது நம்பிக்கையே!

'மேலும், "பயணத்திற்குக் கைத்தடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக்காசு முதலிய எதையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். ஆனால் மிதியடி போட்டுக்கொள்ளலாம். அணிந்திருக்கும் அங்கி ஒன்றே போதும்" என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்.' (மாற் 6:8-9)

எம்மை உருவாக்கிக் காத்து வந்த இறைவன், எம்மைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையை நாம் உறுதியாக பற்றி வாழ வேண்டும். இறை நம்பிக்கை எம் உள்ளங்களை முள்ளெனப் பற்றிக் கொள்ள வேண்டும். நம்பிக்கையே எமது வலிமை, அந்நம்பிக்கை எம்மில் உள்ளவரை நாம் வாழலாம். தெய்வத்தைப் பற்றிக்கொள்ளும் கைகளே நம்பிக்கை எனலாம். யானையின் பலமும், அதன் இருப்பும் அதன் தும்பிக்கையிலேயே உள்ளதுபோல மனிதனின் பலம் அவன் நம்பிக்கையிலேயே உள்ளது. வாழ்வு ஒரு போராட்டம் ஆகவே நம்பிக்கை இருக்கும்வரையிலும் நாம் போராடலாம். அதாவது தீமைக்கு எதிராக சாத்தானுக்கு எதிராக, உலகத்திற்கெதிராக நாம் செயற்பட நம்பிக்கையே வலிய சிறந்த ஆயுதமாகும்.

"எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தை பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும். மீட்பைத் தலைச்சீராவாகவும், கடவுளின் வார்த்தையைத் தூய ஆவி அருளும் போர் வாளாகவும் எடுத்துக் கொள்ளுங்கள்." (எபே 6:16-17)

நம்பிக்கையே வாழ்வின் அடித்தளமாகும். ஆகவே இந்நம்பிக்கை எப்போது தளர்கிறதோ அப்போது எமது வாழ்வும் தளர்ந்து விடுகிறது.

பரீட்சையில் சித்திபெறுவேன் என்ற நம்பிக்கையில் ஒரு மாணவன் தன் கல்வியைத் தொடர்ந்து முன்னெடுக்கின்றான். மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றும் வீரன் ஒருவன் தான் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே தன் பயிற்சியை மேற்கொள்கின்றான்.

உண்மையான கிறிஸ்தவனும், கிறிஸ்துவின் மீது தனக்குள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்வதால் தன்வாழ்வின் இடர்களை மேற்கொள்கிறான்.

"நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை; குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை; துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை; வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கின்றோம்" (2கொரி 4:8-10)

இவ்வாறு இடர்மிக்க தூய பவுலின் வாழ்க்கைப் பயணத்தில் அவருக்கு உரம் கொடுத்தது அவர் கிறிஸ்துவின் பலம் கொண்டிருந்த நம்பிக்கையும், அன்புமே என்பது அவர் விட்டுச் சென்ற திருமடலின் வார்த்தைகள் வழியாக தெளிவு பெறுகின்றது.

கிறிஸ்துவின் உண்மைச் சீடன், இடர் மத்தியிலும் கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமுள்ளவனாகவும், இறை பராமரிப்பிலே முற்றும் நம்பிக்கை கொண்டவனாகவும் திகழ வேண்டுமென்பதை எண்பிக்கவே இயேசு தன் பணிக்காகச் சீடரை அனுப்பும்போது எதையுமே அவர்கள் கொண்டு செல்லக் கூடாதென்கக் கட்டளை இட்டு அனுப்புகிறார். வீணான உலகக் கவலைகளாலும், பேராசையாலும் சீடர்கள் உள்ளம் குழப்படையக் கூடாதென்பதே இயேசுவின் நிலைப்பாடாக இருந்தது.

உலகிற்கும், கடவுளுக்கும் கிறிஸ்தவன் பிரமாணிக்கத்துடன் பணி செய்ய இயலாது. இறை பணியாகிய நற்செய்திப் பணி வாழ்வோடு ஒன்று கலக்க வேண்டும். மனமாற்றமும், இறைவல்லமை மிக்க செயல்களும் இறைபணியில் வெளிப்பட வேண்டும். இறைபணியும், பிறர் அன்புப் பணியும் கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களின் பணியின் இரு முகங்களாகும். இதை எண்பிக்கவே கிறிஸ்து தம் சீடரை இருவர் இருவராக அனுப்பினார். அவர்களும் இறைபராமரிப்பிலே முற்றுமுழுதாக நம்பிக்கை வைத்து தம் சீடத்துவப் பணியை மேற்கொண்டனர். இறை பராமரிப்பிலே முற்றாக நம்பிக்கை வைக்க பற்றற்ற நிலை அவசியமாகின்றது. ஆகவே பற்றற்ற நிலையிலேயே இயேசு தம் சீடரை பணிக்கு அனுப்பினார். கிறிஸ்துவே எம் நிலையான சொத்து. அவரிடமே நாம் எம் நம்பிக்கையை எல்லாம் பதிய வைப்போம். இயேசு என்ற நாமம் எமது உள்ளத்தில் அதிகம் எதிரொலிப்பதாக இறைபணி எம் வாழ்வின் ...

# காவலன் கண்மணிகள்

## பசி

மனிதன் உள்ளம் ...
அவனது உண்மையான பசி
ஏனெனில்.....
அதில் பதிப்பட்டிருக்கும்
...
அவன் அழியும் வரை
அழியாது.

## கல்வி

கண்ணுக்கு இமை போல
கருத்துக்கு தெளிவு போல
...
...
பேனைக்கு மை போல
பறவைக்கு சிறகு போல
மாணவனுக்கு கல்வியழகு

## பார்க்க முடியவில்லை

பயங்கரவாதமும்
பக்கோத்திரத்தனமும்
... கண் மூளனோ!
பார்க்க முடியவில்லை
பஞ்சமா பாதங்கள் ...
பரிதாபமான இப்பாருலகை

ஜெயா ...

## மனிதர்களின் மூன்றெழுத்து வாழ்க்கை வட்டம்

மனிதன் "அன்னை" என்னும் மூன்றெழுத்து உயிரினூடாக பிறந்து "பிள்ளை" என்னும் மூன்றெழுத்தால் வேராகி "இளமை" என்னும் மூன்றெழுத்தால் இளமையில் காலடிந்து "காதல்" என்னும் மூன்றெழுத்து வலைக்குள்ளே சிக்கி மணம் புரிந்து "பிள்ளை" என்னும் மூன்றெழுத்து செல்வத்தை பெற்று "முதுமை" என்னும் மூன்றெழுத்து பருவத்தை எட்டி "உடல்" என்னும் மூன்றெழுத்திலிருந்து "உயிர்" என்னும் மூன்றெழுத்து பிரிய "சுடலை" என்னும் மூன்றெழுத்தை நோக்கி உடல் பயணமாகிறது. இவ்வாறு "வாழ்வு" என்னும் மூன்றெழுத்தின் பயணம் நிறைவு பெறுகிறது.

அ. விரிஸ்ரியா, சக்கோட்டை.

## பொன் மொழிகள்

- பணத்தைத் தீய வழியில் இழப்பது குற்றம் ஆனால் தீய வழியில் தேடுவது அதை விடப் பெரிய குற்றம். தீய வழியில் செலவழிப்பது எல்லாவற்றிலும் பெரிய குற்றம்.
- தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியாத பெண்ணை வேறு யாரும் காப்பாற்ற முடியாது. அவளைக் காப்பாற்ற ஒருவருக்கும் உரிமை கிடையாது.
- வாழ்க்கையில் கண்டிப்பாக ஓர் இலட்சியம் இருக்க வேண்டும் அப்படி இருந்தால் தான், செல்வத்தைத் தொடர்ந்து பெற முடியும்.
- சிறந்த கவிதையைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் தாம் தரமற்ற கவிதைகளை எழுதித் தங்களைக் கவிஞராக அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர்.
- "இருள் இருள்" என்று சொல்லிக் கொண்டு சும்மாயிருப்பதை விட ஒரு சிறிய மெழுகுவர்த்தியைத் தேட முயற்சி செய்.
- ஒருவனிடம் எவ்வளவு திறமை இருந்தாலும் அவனிடம் அடக்கமும் இணைந்து இருந்து விட்டால் அவனால் பயன் ஏதுமில்லை.
- தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலம் நடப்பதற்குப் பதிலாக தலையால் நடப்பதைப் போன்றதாகும்.
- மற்றவர்களைக் கெட்டவர்கள் என்று சொல்லுவதன் மூலம் நாம் நல்லவர்களாகி விடமாட்டோம்.

ஆக்கம்: ஏ. பொ. பிரசாத். ஆனைக்கோட்டை.

## மதங்களில் ஒற்றுமை மனிதர்களில்...

★ Temple, Mosque, Church, அனைத்தும் 6 எழுத்து சொற்கள்
★ கோவில், மசூதி, சேர்ச் அனைத்தும் 3 எழுத்துச் சொற்கள்
★ சிவபெருமான், முகமதுநபி, யேசுகிறிஸ்து அனைத்தும் 6 எழுத்து சொற்கள்
★ வேதம், குரான், பைபிள் அனைத்தும் 3 எழுத்து சொற்கள்

மதங்களுக்கிடையே இவ்வளவு ஒற்றுமை இருக்கும் போது மனிதர்களுக்கிடையே வேற்றுமைகள் ஏன், சிந்தித்துப் பாருங்கள்.

H. H. தோமஸ். கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்பட திறனாய்வு

## The Passion of the Christ
### (கிறிஸ்துவின் பாடுகள்).



**சமூகத் தொடர்பு ஆணையம், யாழ் மறைமாவட்டம்**

2004 ஆண்டு மாசி மாதம் மெல் கிப்சனின் (Mel Gibson) பிரமாண்டமான தயாரிப்பில் வெளியிடப்பட்ட திரைப்படமான The Passion of the Christ பற்றி இவ்வாரம் பார்ப்போம். யூதர்களிடமிருந்து பலத்த அரசியல் ரீதியான எதிர்ப்பையும், உளவியலாளர்கள் மற்றும் சமூகவியலாளர்களிடமிருந்து 'மிக மோசமான வன்முறைக் காட்சிகள் உள்ளடங்கியுள்ளது' என்ற கருத்தியல் எதிர்ப்பையும் சந்தித்தது இப்படம்.

இயேசுவின் இவ்வுலக வாழ்வின் இறுதி பன்னிரண்டு மணிநேர வாழ்வையே கதையாக இப்படம் கொண்டுள்ளது. இயேசுக் கிறிஸ்துவின் கைது, விசாரணை, பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றிய பாரம்பரிய கத்தோலிக்கர்களின் நம்பிக்கைகளை நான்கு நற்செய்திகளை அடிப்படையாகக் கொண்டும், கத்தோலிக்க பாரம்பரியம் மற்றும் மேலதிக விவிலியச் சான்றுகளை மையமாகக் கொண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜெத்சமனியில் இயேசுவின் செபத்துடன் படம் ஆரம்பிக்கிறது. சாத்தானின் இறுதிச் சோதனை நேரம். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய அன்புச் சீடர்கள் அருகில் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளனர். இயேசு சாத்தானின் சோதனையை வெற்றி கொள்வதை, தத்ரூபமாக ஒரு பாம்பை மிதித்துவிட்டு செல்வதாகக் காட்டுகிறார்கள். ஆதிப்பெற்றோரை ஏமாற்றிய வஞ்சகப்பாம்பு மிதிக்கப்படுகிறதோ? பின்னர் யூதாசின் முத்தம், கைது, பேதுருவின் வாள் வீச்சு, இயேசுவால் காது குணமாக்கப்படல், பேதுருவின் மறுதலிப்பு, சீடர்களின் சிதறியோட்டம் என்று பாரம்பரிய திருப்பாடுகளின் காட்சிக்குரிய பண்புகளுடன் படம் நகர்கிறது.

இத்திரைப்படத்தின் தனித்துவமான அம்சம் என்னவெனில், இதற்கு முன்னர் வெளிவந்த இயேசுவைப் பற்றிய திரைப்படங்களில் அவரது பாடுகளில் உள்ளடங்கியிருந்த - ஆனால் வெளிக்கொணரப்படாத அல்லது மழுங்கடிக்கப்பட்ட பலாத்காரம், வன்முறை, இரத்தக்களரி போன்றவற்றை மிகத் துல்லியமாக வெளிக்கொணர்ந்து படமாக்கியிருப்பது தான்.

இயேசுவின் இறப்பு மிகத் தெளிவாக ஓர் அரசியல் கொலையாகக் காட்டப்படுகிறது. அரசியல் - மதம் ஆகியவற்றின் துல்லியமான கூட்டிணைவான இயேசுவின் காலத்தைய யூத தலைமைப் பீடம், உரோமைய அதிகாரிகள் இயேசுவைவிடுவிக்க வழி தேடிய போதும், தந்திரமாகக் குழ்ச்சி செய்து உரோமையர்களைக் கொண்டே அவரைச் சிலுவைச் சாவுக்கு உட்படுத்துகிறார்கள். இங்கே தான் இத்திரைப்படத்திற்கு எதிராகவும், மெல்கிப்சனுக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்ட தற்கால யூதர்களின் காழ்ப்புணர்விற்கான காரணம் தெளிவாகிறது. கிறிஸ்துவிக்குப் பின்னைய 2000 வருட வரலாற்றில், யூதர்களுக்கு எதிராக அவ்வப்போது கிறிஸ்தவர்களிடமிருந்து எதிர்ப்பும், வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதற்கு மேலெழுந்த காரணமாக "கடவுள் கொலை" (Deicide) (இயேசுவைக் கொலை செய்தது) முன்வைக்கப்பட்டது. ஹிட்லர் கூட ஜேர்மனியில் தான் மேற்கொண்ட யூத இனச் சுத்திகரிப்புக்கு இக்காரணத்தையே கூறினான். இதற்கெதிராக, யூதர்கள் தம்மை நியாயப்படுத்த முன்வைத்த வாதம், "நாம் (யூதர்கள்) இயேசுவைக் கொல்லவில்லை. புறவினத்தாரான உரோமையர்கள் தான் இயேசுவைக் கொன்றார்கள்" என்பதாகும். ஆனால் மெல்கிப்சன் இப்படத்தில் மிகத்தெளிவாக 'யூதர்களே இயேசுவின் கொலைக்கு பொறுப்பானவர்கள்' என்ற வரலாற்றுப் பழியை பட்டை தீட்டி, மெருகூட்டிக் காட்டுகிறார். இத்தன்மை, தற்காலத்திலும் கிறிஸ்தவர்களிடம் தமக்கெதிரான உணர்வைக் கிளப்பிவிடும் என்று அஞ்சுகின்ற யூதர்கள், இப்படத்திற்கெதிராக தம் அரசியல் எதிர்ப்பைக் காட்டினார்கள். ஏனெனில் அமெரிக்க, ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகளே இன்று மத்திய கிழக்கில் இஸ்ராயேலின் இருப்புக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவுகின்றன. இப்படம் வெளிவந்த பிறகு இதன் தயாரிப்பாளரான மெல்கிப்சன் மீது பல அவதூறுகளையும், குற்றச்சாட்டுகளையும் முன்வைத்து அவரை சினிமாத்துறையில் இருந்தே அப்புறப்படுத்த பல முயற்சிகளை யூதர்கள் செய்தார்கள். ஆனால் அவர் அவற்றில் இருந்து தற்போது விடுவிக்கப்பட்டு மீண்டுவிட்டார்.

இயேசுவின் பாடுகளில் உள்ளடங்கியுள்ள வன்முறையும், இரத்தக் களரியும் மிகக் கொடூரமானது. எனவேதான் 12 வயதுக்குட்பட்ட சிறார்கள் இப்படத்தை தனியாகப் பார்ப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. மனிதருக்குள்ளே இயல்பாகவே வன்முறை கலந்துள்ளது. சக மனிதனின் இரத்தத்தை சிந்துவதிலே இன்பத்தைக் காணுகின்ற இயல்பு அவனுக்குள் கலந்துள்ளது. மனிதரின் இவ்வியல்பை "வன்முறை மனிதன்" (Homo Violens) என்று அழைக்கலாம். இயேசுவின் பாடுகள், மரணத்திலே அக்கால மனித வன்முறையின் உச்சம் நன்கு தெளிவாகிறது. இயேசுவை சாட்டையால் அடிப்பவன், ஒரு கட்டத்தில் இரத்த வெறி பிடித்தவனாக மாறி, தன் சக சிப்பாயையே தாக்குகின்ற மதி மயங்கிய நிலைக்கு மாறுவதை நன்கு படமாக்கியுள்ளனர். தற்கால உலகின் அதி நவீன தொழில் நுட்ப வளர்ச்சியுடன், சித்திரவதை முறைகளும், வன்முறை நுட்பங்களும் அதீத வளர்ச்சியடைந்து விட்டன. இப்பின்னணியில், இயேசுவின் பாடுகளில் உள்ளடங்கிய உச்ச வன்முறையை மீளவும் திரையிட்டுப்பார்க்கும் மெல்கிப்சன், இறைமகன் அனுபவித்த வன்முறையோடு, தற்கால மானிட மக்கள், கைதிகளாக, அகதிகளாக, தடுப்பு முகாம்களுக்குள்ளும், சித்திரவதைக் கூடங்களுக்குள்ளும் உடல், உளம் சார்ந்து, வார்த்தைகளில் வடிக்க முடியாது அனுபவிக்கும் வன்முறைகளை ஒப்பிட்டுப் பார்த்து ஒத்த உணர்வோடு சிந்திக்க அழைக்கிறார்.

துரோகி யூதாசின் முடிவும் மிகப்பரிதாபகரமானதாக, அதே வேளை வெறுக்கத்தக்கதாகவே காட்டப்படுகிறது. மனச்சான்றால் அலைக்கழிக்கப்பட்ட யூதாஸ், தறிகெட்டு ஓடுகிறான். இறந்து கிடந்த ஒரு கழுதையின் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றுத் துண்டை எடுத்து தூக்கு மாட்டி சாகிறான். பிதுங்கி வரும் அவன் கண்களை காகங்கள் வந்து கொத்தி உண்கின்றன.

இப்படத்தின் மூல மொழிகளாக அரமேயம், ஹீப்ரேயம், லத்தீன் என்பன பாவிக்கப் படுகின்றன. கதாபாத்திரங்கள் அக்காலத்திற்கேற்ப தத்தம் மொழிகளிலேயே பேசுகிறார்கள். தற்கால ஏழு மொழிகளிலே உபதலைப்புக்கள் உள்ளன.

கொடூரமான முறையில், யூதர்களின் கொலை வெறிக்குப் பலியாகிய இயேசு, விடுதலை என்ற மானிட நம்பிக்கையை உரமூட்டுபவராக உயிர்பெற்று வருவதுடன் திரைப்படம் முடிகிறது. மொத்தத்தில் தற்கால மானிடம் மீதான வன்முறைகளின் கட்டவிழ்ப்பினையும், இரத்த வெறி பிடித்த, மனித இரத்தத்தைச் சிந்தும் கொடிய போரை நியாயப் படுத்தும் அரசியல்-சமய தலைமைகளையும், இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினூடாக நிர்வாணப் படுத்திக்காட்டுவதாக The Passion of the Christ அமைந்துள்ளது.


# தூய பவுலின் பிறப்பின்
## 2000ம் ஆண்டு யூபிலி 29.06.2009
### யூபிலி ஆண்டு இறுதி நாள் நிகழ்வுகள்

காலம் : 2009 யூன் 27, சனி காலை 9.00 மணி
இடம் : யாழ். மறைக்கல்வி நடுநிலையம்

* கருத்தரங்கு * பட்டி மன்றம் * குறும் திரைப்படம்
பட்டி மன்றம் (மறையாசிரியர்களுக்கானது)
கருத்தரங்கு (இளைஞர், வளர்ந்தோர்)

இவ் இறுதி நாள் நிகழ்வில் கலந்து சிறப்பிக்க அனைவரையும் அழைக்கின்றோம்.



மறைக்கல்வி நடுநிலையம்
யாழ்மறை மாவட்டம்,
யாழ்ப்பாணம்.



**இளையோர் மறைக்கல்வித் தேர்வு திகதி மாற்றம்**

மேற்படி தேர்வு ஜூன் மாதம் 27ம், 28ம் திகதிகளில் நடைபெறும்.

இயக்குனர், மறைக்கல்வி நடுநிலையம்.


## தூய பவுலின் ஆண்டு நிறைவு

தூயபவுலின் பிறப்பின் 2000ம் ஆண்டுநிறைவு யூபிலி ஆண்டாக கடந்த 2008ம் ஆண்டு ஆனிமாதம் 29ம் திகதி ஆரம்பமாகியது. இம்மாதம் 29ம் திகதி நடைபெறவுள்ள தூய பேதுரு, தூய பவுல் திருநாளோடு இவ் யூபிலி ஆண்டு நிறைவுபெறுகின்றது. நிறைவு நாளின் போது உரோமாபுரியிலுள்ள தூய பவுல் பேராலயத்தில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் தலைமையில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.


எமது மறைமாவட்டத்திலும் தூய பவுலினுடைய யூபிலி ஆண்டையொட்டி மறை அறிவுப் போட்டிகள், ஒளிப்படக் காட்சிகள், பவுலின் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்பட நிகழ்வுகள் போன்ற பல சிறப்பு நிகழ்வுகள் பல பங்குகளில் நடைபெற்றன. தூய பவுல் பற்றிய பல சிறப்புக் கட்டுரைகள், கவிதைகள் இவ் யூபிலி ஆண்டில் வெளிவந்த பாதுகாவலன் இதழ்கள் தாங்கி வந்ததை வாசகர்கள் அறிவீர்கள்.

தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவராக மிகவும் துணிச்சலான நற்செய்தி அறிவிப்புப் பணியாற்றிய தூய பவுலை தொடர்ந்து நாம் எம் முன்மாதிரிகையாகக் கொண்டு விசுவாசத்தில் உறுதிபெற்று மறைப்பணி [illegible]

# நினைவலைகளின் சங்கமம்


## 7ம் ஆண்டு நினைவு

திருமதி
**மரியம்மா பத்திநாதர்**



மண்ணில் 25.03.1916 — விண்ணில் 27.06.2002

இரக்கமுள்ள இறைவா!
ஏழு ஆண்டுகளின் பின்னரும்
உயிரோட்டமான நினைவுகளோடு
நாம் வாழுவதற்கு ஏற்ற
ஒரு அன்னையை எமக்கு
தந்தமைக்காக நன்றி கூறுகிறோம்
அவருடைய ஆன்மா
நித்திய சாந்தி அடைவதாக!

நினைவுகளுடன்
திரு. ஞா.பத்திநாதர்
குடும்பம்.

அழுக்கை
அளவெட்டி. Advt



## ஓராண்டு நினைவு



அமரர் மார்க்கு யாக்கோப்பு
(யேசுகப்)

பிறப்பு 23.02.1943 — இறப்பு 19.06.2008

ஆண்டு ஒன்று கடந்துவிட்டாலும்
ஆறாது நம் துயர்
எம் வாழ்வுக்கு வழிகாட்டி
அன்பிற்கு செயல்வடிவம் கொடுத்து
எம் வாழ்வை உயர்த்திய
உம் நினைவுகளில் நாம் வாழ்கின்றோம்
நீர் இறை சன்நிதானம்.
இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

உம் நினைவுகளில் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்

சிலாலி,
எழுதுமட்டுவாள். Advt-48/09



## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி மேரி திரேசா
தவமணி மார்சலீன்

மலர்வு 06.02.1933 — உதிர்வு 18.06.2006

ஆண்டு மூன்று போனாலும் அன்னையே
உம் அன்பு முகம் மறவோம் நாம்
பதினாறும் பெற்ற பாக்கியவதியம்மா நீர்
பரமன் இயேசுவின் மலர்ப்பாதம் துயிலுமம்மா

"தவமாசா"
நாக்கியம்புலம்
ஏழாலை தென்மேற்கு
சுன்னாகம்.


Advt-49/09

இவரின் பிரிவின் துயரில்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்



## 31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் சிங்கராயர் றொகேசன்
பேனாட் மதுரநாயகம்



மண்ணில் 21.11.1949 — விண்ணில் 19.05.2009

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்"

இவரது ஆன்மா நித்திய பிதாவை முகம் முகமாக தரிசித்துக் கொண்டிருக்க வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 20.06.2009 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் இரக்கை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

32, அச்சக வீதி,
யாழ்ப்பாணம். Advt-47/09

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



## 31ம் நாள் நினைவு



மனுவேற்பிள்ளை ஜேம்ஸ்
எமிலியானுஸ்

தோற்றம் 17.12.1950 — மறைவு 18.05.2009

இரக்கமுள்ள இயேசுவின்
திரு இரத்தம்
இவருடைய ஆன்மாவின்
வேதனைகளை நீக்கி
நித்திய இளைப்பாற்றியைக்
கொடுப்பதாக
சமாதானத்தில் இளைப்பாறுவாராக

அன்பு மனைவி டெய்சி
மகள், மகன், உறவுகள்

108/5 BELMONT STREET
COLOMBO - 12
(பிறப்பிடம் : புங்குடுதீவு) Advt


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுவை திருத்தலத்தை... (1ம் பக்கத் தொடர்ச்சி)

மகன், அன்ரனிதாஸ், லூயிஸ் பொன்னையா அமதி ஆகியோர் மறையுரை ஆற்ற, நற்கருணை விழா ஆராதனையை அருட்தந்தை கிருபாகரன் அடிகள் சிறப்புற நடாத்தினார்.

13ம் திகதி மாலையில் புனித அந்தோனியாரின் தேர்ப்பவனி பக்தி யுணர்வோடு நடைபெற்றது. இறுதியாக யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் புனித அந்தோனியாரின் திருச்சுரூப ஆசிரோடு விழா இனிதே நிறைவுபெற்றது.

சுமார் இருபதினாயிரம் பக்தர்கள் புனித அந்தோனியாரின் ஆசீரைப்பெற பக்திப் பரவசத்தோடு கூடியிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பங்குத் தந்தையர்கள் அருட்திரு. யாவிஸ், அருட்திரு. மில்பர் ஆகியோர் விழா நிகழ்வுகளை நெறிப்படுத்த, ஆலய அருட்பணி சபையினர், இளைஞர், யுவதிகள், அன்னையர்கள், பங்கு மக்கள் கைகொடுக்க விழா நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிறைவேறின.

## மண்டைதீவுப் பணிக்களம்

1990ம் ஆண்டு யாழ். கோட்டையை மீட்க நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையோடு சிதறடிக்கப்பட்ட பணிக்களங்களுள் மண்டைதீவும் ஒன்றாகும். இன்றுவரை முற்று முழுதான மீள் குடியேற்றத்திற்கு தடை செய்யப்பட்ட இடமாகவும் உள்ளது.

தொழில் காரணமாக ஏறத்தாழ 70 குடும்பங்கள் மண்டைதீவிற்குள் சென்று வாழ்கிறார்கள் ஆனால் பெரும்பாலானவர்களின் வீடுகள், ஆலயம்-பங்குமனை அடங்கலாக கடற்படையின் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதனால், தற்காலிக கொட்டில்களிலும், கைவிடப்பட்ட வீடுகளிலுமே குடியிருக்கிறார்கள். ஏனைய பெரும்பாலான மண்டைதீவு மக்கள் யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதிகளில் குடியிருந்தாலும், தம் ஊர் மேல் உள்ள ஈர்ப்பின் நிமித்தம் அடிக்கடி அங்கு சென்று வருவதைக் காண முடியும். ஆனால் அனைவருமே கடற்படையின் விசேட அனுமதி (பாஸ்) முறைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

ஆலயமும், பங்குமனையும் அதன் சுற்றாடலும் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வருவதனால் மண்டைதீவு பங்கு பணியாளர், தம் மக்களுடன் தங்க முடியாத நிலை உள்ளது. தற்போது புனித சவேரியார் குருமடத்துக் குருக்களும், ஆயர் இல்லக் குருக்களும் கிழமைக்கு இருதடவைகள் திருப்பலிக்கு சென்று வருகிறார்கள். இவ்வகையில் கடந்த வைகாசி மாதம் வரை பங்குப் பணியாளராகவிருந்த மதி இளம்பரிதி தனது உயர் கல்வியின் நிமித்தம் வெளிநாடு செல்லவிருக்கும் நிலையில், புதிய பணியாளராக போல் றொகான் பொறுப்பேற்கிறார். மண்டைதீவு ஆலயத் திருச்சபையின் விழா வழமை போல வரும் ஆவணி மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இவ்விழாவை மையமாக வைத்து, அழிந்து போய்க் கொண்டிருக்கும் தமது ஆலயத்தை புனரமைத்து, தமது பணிக்களத்தையும் உயிர்ப்பூட்டம் செய்ய மண்டைதீவு ஆலயத்திருச்சபை முழு உற்சாகத்தோடு மெல்ல எழுந்து நிற்கிறது. எவ்வித தடைகளும், வலயங்களும், கட்டுப்பாடுகளும், பாஸ்களும் அகன்று மண்டைதீவு பணிக்களம் நிமிர்ந்து நிற்பது எப்போது?

## நலன்புரி நிலையங்களில் அவதியுறும் மக்களுக்காக பரிந்து பேசும்படி புனித அந்தோனியாரை வேண்டுவோம்

### - இதுவே காலத்தின் தேவையாகும் -

**குருமுதல்வர் அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள்**



"ஒரு செயல் பல கோணங்களில் சிந்திக்கத் தூண்டுவதுடன் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்ற அங்கலாய்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கோடி அற்புதரிடம் வேண்டுவது என்ன?... ஆண்டவரின் திருச்சித்தத்தை ஏற்று வாழும் மன வலிமையைத்தாரும் என்பதே எமது ஏகோபித்த வேண்டுதல். இதையே புனிதரும் பின்பற்றினார். புனிதரே நாம் உமக்கு என்ன செய்ய வேண்டும்?.. என்ற வினாவை எழுப்பி அதற்கு விடைகாண முயல்வோம். நற்கருணைப்பக்தியோடும் நற்செய்திப் பற்றோடும் வாழ்ந்தால் அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் கைமாறாகும் என புனிதர் கூறுகிறார். இன்று சமயக் கல்வியின் முக்கியத்துவம் குன்றி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கடவுள் இல்லாத தர்மம் இல்லாத கல்வி.. இவற்றின் விளைவு கொலை, கொள்ளை, பழிக்குப்பழி, அநியாயம், அக்கிரமம், என்று கூறிக் கொண்டே போகலாம். நல்லவர்களை இன்று காணக்கிடைப்பதில்லை. என்னை வதைப்பவனை நான் மன்னித்தால் தான் முழுமையான ஒப்புரவு ஏற்படும். ஒரு கிறிஸ்தவன் வித்தியாசமான உலகை நோக்குகிறான். உலகிற்கு உப்பாயிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறான். ஒரு பொருளை பழுதாகாமற் பாதுகாப்பதோட, ருசியூட்டி, மெருகூட்டும் உப்பாக நாம் மாற்றம் பெற வேண்டும். இன்று எமக்கு ஒரு முக்கிய கடமை முன்வைக்கப்பட்டுள்ளது. நலன்புரி நிலையங்களில் அல்லல்ப்படும் அப்பாவி மக்களுக்காக புனித அந்தோனியாரிடம் வேண்டுவோம். அவர் இறைவனிடம் பரிந்து பேசும்படி மன்றாடுவோம். இதுவே காலத்தின் தேவையாக உள்ளது."

இவ்வாறு சுன்னாகம் பனித அந்தோனியார் ஆலய பெருவிழாக் கூட்டுத் திருப்பலியைத் தலைமையேற்று நிறைவேற்றிய யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் அடிகளார் தமது மறையுரையின்போது குறிப்பிட்டார்.

ஆனி 4ந் திகதி புனிதரின் கொடி அன்பிய ஒன்றியக் கொடி, 05 அன்பியங்களின் கொடிகள் முறையே ஏற்றிவைக்கப்பட்டன. நீர்த்தடாகத்தில் புதுமலர்கள் பூத்தது போல், புதிதாக அமைக்கப்பட்ட ஆலய முன்றல் அலங்கார வட்டப்பரப்பிற்குள் ஏற்றிவைக்கப்பட்ட கொடிகள் காற்றில் அசைந்தாடியமை நெஞ்சத்தை தொட்டன.

தொடர்ந்து ஆரம்பித்த நவநாள் வழிபாட்டு மறையுரைகள் நெஞ்சத்தில் ஆழப்பதிந்தன. அர்த்த புஷ்டியான வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பொருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூபப் பவனி வழமையான பாதை வழியே இடம் பெற்றது. பெருந்திரளான பக்தர்கள் புனிதரின் ஆசீரைப் பெற்றனர்.

சுன்னாகம் பங்குத்தந்தை அருட்பணி. நிரூபன் நிஷானந் அடிகளாரின் வழிநடத்தலோடு சகல விடயங்களும் சிறபாக நிறைவேறின.

**சிறில் சுகந்தரன் J.P,**
**சுன்னாகம்**

## துன்புறும் எம் உறவு... (2ம் பக்கத் தொடர்ச்சி)


ளின் உடல் உளக் காயங்களை ஆற்ற இருக்கும் என்பது எமது நம்பிக்கை. எங்கள் மன்றாட்டை இறைவன் ஏற்று பெரிய அளவிலான மனித அழிவிலிருந்து லட்சக்கணக்கான மக்களை காப்பாற்றியுள்ளார். தொடர்ந்தும் அங்கவீனமாக்கப்பட்டு, முட்கம்பிகளுக்குள்ளே அடைபட்டு, காயப்பட்டு துன்பப்படும் எங்களுக்காக விடியல் வெகு தூரத்தில் இல்லை எனும் நம்பிக்கையுடன் ஏந்திய செபமாலைகளுடன் தொடர்ந்தும் பயணிக்கின்றோம்.

இச்செபமாலைத் தியானத்தின் இறுதி நாளில், நற்கருணை ஆண்டவர் முன் இருந்து, அன்னை மரியாளோடு சேர்ந்து எழுப்பிய எம் செபங்களும், அங்கு பகிரப்பட்ட இறைவார்த்தைகளும அற்புதமாக விருந்தது. இறைவார்த்தைக்கு விளக்கம் கூறுகையில் அருட்தந்தை ஜெயசீலன் அடிகளார் திருவெளிப்பாடு 3ம் அதிகாரத்தையும் தேவ தாயின் மகிமை தேவ இரகசியத்தையும் ஒப்பிட்டு கூறியதை எம் வாழ்வில் மறக்கவே முடியாது. எம் விசுவாச வாழ்வுக்கு தேவையான வாழ்வு முறைகளும் அதற்குள் அடங்கியுள்ளதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டோம்.

இறுதியில் நடைபெற்ற கூட்டுத்திருப்பலியில் அன்னை மரியாள் ஊடாக இறைவன் செய்த மாபெரும் புதுமைகளுக்காக (3 லட்சம் மக்களை மீட்டு வந்தமை) நன்றி கூறியும், இப்போரில் இறந்துபோன அனைத்து ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காகவும் மன்றாடினோம்.

**றஞ்சினி, கொய்யாத்தோட்டம்.**

## யாழ் அ.ம.தி சபைக்கு புதிய குருக்கள்



அருட்சகோ. அமிர்தநாதர் இயூஜின் அமலறாஜ் அ.ம.தி அவர்கள் யாழ் மறை மாவட்டத்திலுள்ள பசுந்தீவு என வர்ணிக்கப்படும் நெடுந்தீவிலே 1974ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 3ம் நாள் திரு.திருமதி அமிர்தநாதர் தம்பதிகளின் மூத்த புதல்வனாக அவதரித்தார்.

இவர் நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலத்திலே தனது ஆரம்பக் கல்வியையும், தனது தொடர்கல்வியை யாழ்ப்பாணம் தூய பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

அருட்தந்தை அன்ரனிதாஸ் அடிகளாரால் அழைத்தல் ஊக்கம் பெற்று 1996ம் ஆண்டு தூய வளனார் அ.ம.திகள் சிறிய குருமடத்திலே தன்னை இணைத்துக் கொண்டார்.

அருட்சகோ. தேவாலகம ஆராட்சிக்கே மெனோ பஸ்ரி ஜயந்த அ.ம.தி அவர்கள் 1979ம் ஆண்டு பங்குனித்திங்கள் 2ம் நாள் மன்னார் மறைமாவட்டத்திலுள்ள பள்ளி முனை என்ற கிராமத்திலே திரு.திருமதி ஜெயரத்ன தம்பதிகளின் மூத்த புதல்வனாக அவதரித்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை பள்ளி முனை லூசியா மத்திய மகா வித்தியாலத்திலும், தனது தொடர் கல்வியை மன்னார் தூய பிரான்சிஸ்கு சவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

அருட்தந்தை ஒல்பன் இராஜசிங்கம் அ.ம.தி அவர்களால் அழைத்தல் ஊக்கம் பெற்று 1998ம் ஆண்டு தூயவளனார் அ.ம.திகள் சிறிய குருமடத்திலே தன்னை இணைத்துக் கொண்டார்.


அருட்சகோதரர்கள் இருவரும் 2000ம் ஆண்டு மக்கோனாவில் உள்ள அலமரித் தியாகிகள் நவசந்தியாச குருமடத்திலே தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

இவர்கள் தமது முதல் வாக்குத்தத்தத்தை 2001ம் ஆண்டு புரட்டாதித்திங்கள் 8ம் நாள் மேற்கொண்டார்கள். தொடர்ந்து 2001ம் ஆண்டு கண்டி தேசிய குருமடத்தில் தமது மெய்யியல் கல்வியை ஆரம்பித்த இவர்கள் அவர்கள் மெய்யியல் மானிப்பட்டத்தை (BPH) பெற்றுக் கொண்டார்கள்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் கொழும்புத் துறையிலுள்ள தூய பிரான்சிஸ்கு குருத்துவக் கல்லூரியில் தமது இறையியல் கல்வியை ஆரம்பித்து இறையியல் மானிப் (BPH) பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவர்கள் தமது நித்திய அர்ப்பணத்தை கொழும்புத்துறை தூய வளனார் ஆலயத்தில் 2008ம் ஆண்டு மார்கழித்திங்கள் 17ம் நாள் மேற்கொண்டார்கள். மறுநாள் (18.12.2008) அதே ஆலயத்தில் யாழ்மறை மாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திருத்தொண்டர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

அருட்சகோ. இயூஜின் அமலராஜ் அவர்கள் அப்புத்தளை தூய வனத்துச்சின்னப்பர் ஆலயத்தில் தனது திருத்தொண்டர் பணியினை மேற்கொண்டார்.



இவர் 2009ம் ஆண்டு ஆனித் திங்கள் 18ம் நாள் யாழ்ப்பாணம் தூய அடைக்கல அன்னை ஆலயத்தில் யாழ் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்கரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்களால் இறைவனின் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

இவர் தனது முதல் நன்றித்திருப்பலியை நெடுந்தீவு தூய அந்தோனியார் ஆலயத்தில் ஆனித்திங்கள் 21ம் நாள் காலை 9 மணிக்கு ஒப்புக் கொடுப்பார்.

இவர் 2009ம் ஆண்டு ஆனித்திங்கள் 6ம்நாள் மன்னார் தூய செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை அவர்களால் இறைவனின் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

இவர் தமது முதல் நன்றித்திருப்பலியை பள்ளி முனை தூய லூசியா ஆலயத்தில் ஆனித்திங்கள் 7ம் நாள் ஒப்புக் கொடுத்தார்.

## பருத்தித்துறை கலட்டி தூய அந்தோனியார் ஆலய 175 ஆவது ஆண்டு விழா



பருத்தித்துறை கலட்டி தூய அந்தோனியார் ஆலயத்தின் 175 ஆவது ஆண்டு விழாவும், புனிதரின் திருநாள் திருப்பலியும் இம்மாதம் 13ம் திகதி யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் புனிதரின் திருநாளில் ஒன்றுகூட ஆயர் தன் மறையுரையில் எவ்வளவுக்கு புனித ஆந்தோனியார் தன் அறிவாலும், புதுமைகளாலும் எல்லோரும் போற்றும் அளவுக்கு பெருமையுடையவராக எம் மத்தியில் திகழ்தாலும் அவர் தன் வாழ்வில் தாழ்ச்சி என்னும் பண்பை அணிந்தவராக வாழ்ந்தார். அதுபோல நாமும் தாழ்ச்சி உள்ளவர்களாகவும், சிறப்பாக இப்போரின் விளைவால் துன்பப்படும் மக்களுக்காக செபிக்கவும் கேட்டுக் கொண்டார். மேலும் 175 ஆண்டுகள் இப்புனிதரின் பாதுகாப்பில் இப்பங்கு மக்களின் விசுவாசம் பாதுகாக்கப்பட்டையை நன்றியோடு நினைவு கூரும் வேளை அது பாராட்டத்தக்க விடயமும் எனவும் கூறினார்.

பங்குத்தந்தை அனைவரின் ஒத்துழைப்புடனும் இவ்விழா சிறப்பாக நடைபெற்றது.

**அருட்பணி. இ.ஜீ. விஜின்ரஸ்**


# Priests Day of Sanctification



**22.06.2009 Monday**
**From 9.30 a.m. to 12.30 p.m.**
**at the Bishop's House**

- Vicar General -


**"குருக்களின் ஆண்டு"**
**2009 ஜூன் 19**
**தொடக்கம்**
**2010 ஜூன் 11 வரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.